# சித்தார்த்தி ஆண்டு பிறந்த

  

சித்தார்த்தி ஆண்டு பிறந்த இவ்மூவரும் உம்மால்,
சித்தி பெற ஒரே இடைக்கழியில் ஒன்று சேர்ந்தனரே

பொய்கையில் அவதரித்த வள்ளலே நீரும்,
வையந்தகளியாயெனத் திருமாலைப் பாடியே
பொய்க்காமல் பக்தர்கள் அவனைச்சென்றடைய,
வையத்திற்கு முதல் அந்தாதியை தந்தவரே !

கடல்மல்லைத் திருத்தலத்தினில் அவதரித்து,
அன்பேத்தகளியா என்று அந்தாதியைப் பாடி ;
கடல்மீது பள்ளி கொண்ட அப்பரமனையும்,
அன்பால் மயங்கச்செய்து மகிழ்ந்த பூதரே !

சதயத்திருநாளில், மயிலையில் அவதரித்து,
திருக்கண்டேனெனப் பாடி, பக்தி மனதினில்
உதயமாகச்செய்து மக்கள் அனைவரையும்,
திருமாலே பரனென உணரச்செய்த பேயரே